## கிராமம் நகரம் மாநகரம் - நா. முத்துக்குமார்.

1. நினைவில் காடுள்ள மிருகம்
2. உறைந்து போன நதி
3. விண்மீன்களின் ரகசியம்
4. ஞாயிற்றுக்கிழமை வெள்ளிக்கிழமை
5. நெடுநாள் வாடை
6. காட்டுமிராண்டியின் கால்தடம்
7. தேள் விழும் தாழ்வாரம்
8. ABCD
9. ரசம் உதிரும் கண்ணாடிகள்
10. சைக்கிளாற்றுப்படை
11. உயரங்களுடன் சூதாட்டம்
12. சக்கரம் கட்டிய வண்ணத்துப்பூச்சி
13. மழைக்கு ஒதுங்கும் மாடார்
14. சுண்டு சுந்தரத்தின் சதுரக்காதல்
15. டீ சாப்பிடுங்க தோழர்
16. மைதானத்தில் விளையாடுபவன்
17. இறுக்கிப் பாட்டு
18. சித்தார்த்தன் புத்தனான இரவு
19. பென்சில்கள் கூர் தீட்டப்படுகின்றன
20. ரயிலின் கடைசிப் பெட்டியும் ஐன்ஸ்டீனின் பியானோவும்.

## 1. நினைவில் காடுள்ள மிருகம்

- கிராமம் பாட்டிகளின் சுருக்குப் பையில் உள்ள சில்லறைகளைப் போன்றது. மலைப்பிரதேசத்துக் காற்று மாதிரி எப்போது கேட்டாலும் பிள்ளைகளுக்கும் பேரன்களுக்கும் எடுத்துக் கொடுக்க அதில் இன்னமும் சில்லறைகள் இருந்து கொண்டிருக்கின்றன.

- நகரம் அம்மாக்களின் அஞ்சறைப் பெட்டிகளால் ஆனது. ஒவ்வொரு அஞ்சறைப் பெட்டிகளைத் திறக்கும் போதும் அதற்குள் ஓர் அம்மா அமர்ந்துகொண்டிருக்கிறாள். மளகாய்த்தூளில் அவள் கோபம், மஞ்சள் தூளில் அவள் காமம். அதன் சில்லறைகளில் அவள் பாசம்.

- மாநகரம் அப்பாவின் சட்டைப் பையில் உள்ள ரூபாய் நோட்டுக்களைப் போன்றது. அப்பாவின் உலகம் திறக்கவே முடியாத கதவுகளால் ஆனது.

கிராமத்தில் வாழ்ந்தாலும் நகரத்தில் வாழ்ந்தாலும், மாநகரத்தில் வாழ்ந்தாலும் நாமெல்லாம் காடுகளின் பிள்ளைகள. காடுகளில் வேட்டையாடித் திரிந்து குகைகளில் வாழ்ந்தவர்கள. அதன் நினைவலைகள் எங்கு வாழ்ந்தாலும் நம்மைத் துரத்திக் கொண்டு இருக்கும்

## 2. உறைந்து போன நதி

- குழந்தைகள் அழுதுகொண்டே பிறக்கிறார்கள். பூமி சிரித்துக் கொண்டே வரவேற்கிறது. பால்யம் தன் முதல் முரணை ஆரம்பிக்கிறது.

▷ ஒரு மனிதனின் இயல்புகளையும் அவனுக்குக் கிடைக்கும் பால்யத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது என்கிறார் சிக்மெண்ட் ஃப்ராய்ட்.

▷ பனங்காய் வண்டி, கொட்டாங்குச்சி வண்டு, ஐலதோஷம் கிறாமல், தண்ணீர்ப் பாம்புகள், கண்ணாமூச்சு ரே ரே, கபடி கபடி, பம்பரம் என்று கிராமம் பால்யத்தின் சுவாரஸ்யங்களாய் அமைந்தது.

▷ நகரம் மற்றும் மாநகரங்களின் பால்யம் வேறு விதமானது. தடித்த கம்பிகளை வெறித்துக் கொண்டிருக்கும் குழந்தை வீட்டுப்பாடம் என்னும் பாரத்தால் வெளியே செல்ல முடியாமல் தத்தளிக்கின்றன.

3. விண்மீன்களின் ரகசியம்

▷ பருவவயது கைப்பிடியற்ற இருபுறமும் கூர்மையான பூக்களால் செய்யப்பட்ட கத்தியைக் கொடுக்கிறது. சிலர் பூக்களுடனும் சிலர் காயங்களுடனும் வெளியே வருகிறார்கள்.

▷ கிராமத்தில் மார்கழி மாதங்களில் சாணிஉருண்டையின் பூத்திருக்கும் பூசணிப் பூக்களில், ஆற்றங்கரை நாணல் புதர்களில், கரும்புத் தோட்டங்களில், ஊர்ப்பொதுக்கிணற்றுகளில் திருவிழாக் காலத்து தெருக்கூத்து ராத்திரிகளில் பாரதியும் செல்லம்மாவும் பாடிக் கொண்டிருக்கிறார்.

▷ நகரத்துக் காதல் பெரும்பாலும் தட்டச்சுப் பயிலகங்களை முன்மொழிகின்றன. சில விரல்கள் ஒன்று சேர்கின்றன. சில விரல்கள் அழிக்க முடியாத ரேகைகளுடன் பிரிகின்றன.

▷ மாநகரங்களின் காதல் குறுமிளகைப் போல் சற்று காரமாக இருக்கிறது. கடல் சார்ந்த மாநகரங்களில், கட்டுமரங்களுக்கு

வியர்க்கும் நண்பகலிலும், திரையரங்குகளின் இருட்டு கடைசி நாற்காலிகளில் நட்பில் தொடங்கி காதலில் முடிகின்றன.

## 4. ஞாயிற்றுக்கிழமை வெள்ளிக்கிழமை

➢ இருபது வருடங்களுக்கு முன்பு கிராமத்தில் ஒருவீட்டில் மட்டும் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும். படம்பார்க்க நாலணா, ஒலியும் ஒளியும் பார்க்க பதினைந்துகாசுகள். செவ்வாய்க்கிழமை நாடகத்திற்கு பத்துக் காசுகள். விளம்பரம் செய்தி வருகையில் அணைத்து விடுவார்கள். திரைப்படம் தொடங்கும் போது சரியாகப் போட்டுவிடுவார்கள்.

➢ இன்று ஒரே வீட்டில் மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன. பளல் மைனஸ் பூஜ்யம் என்று திருப்தியுறாமல் ரிமோட் பட்டன்கள் சூன்யத்தில் அலைகின்றன. கதை சொல்லும் பாட்டிகளைத் திண்ணைக்கு அனுப்பிவிட்டு கூடத்தில் அமர்ந்து பொய் சொல்கின்றன. தொலைக்காட்சி ஒரு கறுத்த நிழல் போல் நம்மைத் தொடர்கின்றன.

## 5. பெருநாள் வாடை

➢ காலந்தோறும் கிராமத்திலிருந்து நகரத்திற்கும் மாநகரத்திற்கும் இளைஞர்கள் வந்து குவிந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களின் பெட்டி முழுக்கக் கனவுகள். அந்தக் கனவுப் பெட்டியைத் திறக்கும் சாவியைத் தொலைத்து விட்டு மாநகரத்து வீதிகளில் தேடிக் கொண்டு திரிகிறார்கள்.

சீட்டாட்ட அறை, ஞாயிற்று துணி துவைத்தல், 30 வயது புதிய பிரம்மச்சாரி, பொம்மை வியாபாரி, துபாய் தலைகம், சினிமா முயற்சி செய்பவர் எனப் பலவிதங்கள்

மேன்சன் வாழ்க்கை.

➤ ஐந்து வருடங்களுக்கு முன்பு இறந்த அம்மாவிற்காக தற்போது மொட்டையடித்திருந்தார். தொடர்பற்று இருந்த ஊரில் செய்தி சேர்க்க செங்கால் நாரையும் இல்லை. மாநகரம் வெற்றிகளின் பாதையில் உறவுகளைப் பலிகொடுத்தபடி விரைந்து கொண்டிருந்தது.

## 6. காட்டுமிராண்டியின் கால்தடம்

➤ ஒற்றையடிப் பாதைகளில் கணக்கற்ற கால்தடங்கள் தினந்தோறும் பதிந்துகொண்டே இருக்கின்றன. ஒருகாலடிச்சுவடுகூட இன்னொன்று மாதிரி இருப்பதில்லை. காலங்களுக்கும் முன்பு தன்னை உருவாக்கிய முதல் காட்டுமிராண்டியின் காலடியை மட்டும் அவை பூக்களால் வேலி கட்டி கவனமாக பத்திரப்படுத்தி வருகின்றன.

➤ ஒற்றையடிப் பாதைகளின் வருத்தம், சந்தோஷம், வெட்கம், கோபம், அச்சம், ஆனந்தம் என அனைத்து உணர்ச்சிகளையும் உள்வாங்கி செம்மண் சாலைகள் மேலும் சிவக்கின்றன.

➤ மாநகரத்தின் தார்ச்சாலைகள் பாம்புகளைப் போல் வளைந்து நகரம் தாண்டி கிராமங்களுக்குள்ளும் நுழைந்து ஊடுகின்றன.

➤ விவசாயி நெற்றோள்களை அள்ளி எடுத்து மாநகரத்தின் மீதிருக்கும் தன் கோபங்களையெல்லாம் ஒன்று சேர்த்து தார்ச்சாலையின் மேல் உக்கிரமாக அடிக்கிறான்

7. தேன் சிட்டும் தூக்கணாங்குருவியும்

➢ ஒரு விசேஷ கோடைக்காலம் கொளுத்துமானது பகலின் வெப்பம் தாங்காமல் இலைகளெல்லாம் சுருண்டிருந்தது நிழலை நோக்கி தேன்சிட்டு, நடமாட்டங்களில் போன்ற பூச்சிகள் தேடி வரும். எத்தனையோ இருபதாம் போர்வையில் தேன்கூடு புரண்டு பறந்து கொண்டன.

➢ வீட்டுக்கு மேல் தளத்தில் விளையாடும் குழந்தைகள் தான் உண்மையில் வீடுகளை கவர்கின்றனர்.

➢ மாநகரம் அமைதியாக இரவில் நிம்மதியாகின்றது கண்ணில் பொருத்தியிருக்கும் லென்சுகளின் வழியே மாநகரம் வெளியே நிற்பவர்களின் முகங்களைப் மேல்நோக்கிப் பார்த்து சந்தேகத்துடன் உள்ளே அனுமதிக்கிறது.

➢ வீட்டைக் கட்டியவர் என்பவர்கள் வீடு கட்டுவதைப் பார்க்கக் கூட அனுமதிக்காமல் மாநகரத்தில் வீடுகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன.

8. ABCD

➢ கிராமத்தில் இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகு பாட்டிமார் கதை சொல்லத் தொடங்குவார். ஒரு ஊர்ல என்று ஆரம்பித்து ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி கதைகள் சஞ்சரிக்கும்.

➤ கிராமத்தின் ஒரே பொழுதுபோக்கு டூரிங் டாக்கீஸ். ஆற்று மணலில் அமர்ந்தபடி, சாம்பல் நிறத்தில் சாயம் போன திரையில் பொரி உருண்டை சாப்பிட்டபடி படம் பார்ப்போம். பக்கத்து ஊரைச் சேர்ந்த ஒரு அண்ணன் எங்கள் தெரு அக்காவிற்கு கடிதம் கொடுத்து என்னைக் கொடுக்கச் சொன்னான். சில மாதங்களில் இருவரின் வீட்டிற்கும் விஷயம் தெரிந்து சண்டையானது அந்த ஜோடி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டனர். இப்போது டூரிங் டாக்கீஸ்களில் சவுக்குக் கட்டைகளுக்குப் பதில் ஆளுயரச் சுவர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேலி போடுகின்றன.

➤ A B C D என்று மாநகரம் ஆண்களையும் பெண்களையும் எண்களாக மாற்றி சம உரிமை கொடுத்து உட்கார வைக்கிறது.

➤ மாநகரத்து பெருந்திணைக் காதலர்களும், உடன்போக்கு ஜோடிகளும் கடைசி இருக்கைகளைக் கேட்டு வாங்கிப் படம் பார்க்கிறார்கள். கைக்கிளை அன்பர்கள், கழிவறைகளில் தத்தம் காதலியின் பெயரையோ படத்தையோ கிறுக்கி அதற்குக் கீழ் ஆட்டின் வரைகிறார்கள்..

## 9. ரசம் உதிரும் கண்ணாடிகள்.

- எங்கள் கிராமத்தின் ஒரே ஒரு அழகி. அவளை முன்னிறுத்தி கிராமத்தில் நிறைய கிளைக்கதைகள் உருவாகி இருக்கின்றன. காயத்ரிக்கு முன்னால் (கா.மு) காயத்ரிக்குப் பின்னால் (கா.பி). அந்தக் காலத்தில் பத்தாம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் இளைஞர்கள் ஃபெயிலாவதற்கு இரண்டே காரணங்கள் தான் இருந்தன. ஒன்று ஆங்கிலம் அல்லது கணிதம் பாடம், அடுத்தது காயத்ரி

- காயத்ரியின் அப்பாவிற்கு மாநகரத்தில் வேலை மாற்றம் வந்தது அவள் சென்றுவிட்டாள். மாநகரம் தன் ரகசியக் குறிப்பேட்டைத் திறந்து கிராமத்திலிருந்து ஒருலட்சத்து பதின்மூன்றாயிரத்து நாற்பதாவது காயத்ரி என்று எழுதிவிட்டு அடுத்த காயத்ரிக்காகக் காத்திருந்தது

## 10. சைக்கிளாற்றுப்படை

- சைக்கிளைக் காதலிக்காத சிறுவர்கள் உண்டா? கிராமம் நகரம் மாநகரம் என எல்லா சாலைகளிலும் மடி நிறைய மனிதர்களை ஏற்றிக் கொண்டு இரும்பு காங்காருவைப் போலத் தாவிச் செல்கிறது சைக்கிள்.

- கிராமத்தில் சைக்கிள் விடப் பழகியவர் உலகில் எந்த மூலையிலிருந்தாலும் எந்த வாகன நெரிசலாயினும் சைக்கிள் ஓட்டலாம்

▷ சைக்கிளால் அடையாளப்படும் மனிதர்கள் நிறையபேருண்டு. உச்சி வெயில் ஏறிய வெளிச்சத்தில் வியர்வையுடன் கடிதம் சுமக்கும் தபால்காரர்கள், மஞ்சள் வெளிச்சத்தில் புறப்பட்டு மஞ்சள் வெளிச்சத்திலேயே திரும்பி வரும் ஒற்றை ரோஜா சூ செருகிய கொண்டை போட்ட ஆரம்பப்பள்ளி டீச்சர்கள், உறைகத்தி வடிவில் தெருத்தெருவாய்க் கூவி குல்ஃபி ஐஸ் விற்பவர்கள், என நிறைய நபர்கள் சைக்கிளுடனே நினைவுகூரத்தக்கவர்கள்

▷ சென்னை மாநகரச் சாலைகளில் நான்கு வழிப்பாதைகளின் விதி அறியாத காலம். சுரங்கப் பாதையில் சைக்கிளைத் ~~[illegible]~~ தூக்கிக் கொண்டு இறங்கி அனைவரின் ஆச்சரியமும் கிண்டலும் கலந்த பார்வையை எதிர்கொண்டு நடக்கையில். சைக்கிளின் சக்கரங்கள், மாநகரத்துச் சரளைக் கற்கள் குத்திப் பஞ்சர் ஆகிக் கொண்டிருந்தன.

## 11. உயரங்களுடன் சூதாட்டம்

▷ கிராமத்தில் மண்ணின் மீது இருந்ததைவிட மரங்களின் மீது இருந்த நேரமே அதிகம். எல்லா மரத்திலும் ஒரு வவ்வால் காத்துக் கிடக்கும். மரங்களுக்குப் பின் அதிக உயரங்களைக் கற்றுக் கொடுத்தது எங்கள் ஊர்க் கோயில் கோபுரம்

▷ மீனம்பாக்கத்தைக் கடக்கும் அபூர்வ விநாடிகளில் அப்பா எழுப்பி விமானங்களின் ஆச்சரியங்களை அறிமுகப்படுத்துவார்.

▷ எனக்கு முதல் விமானப்பயணம். பால்ய காலத்தின் பரவசம் என் ரத்தத்தில் பரவத் தொடங்குகிறது.

## 12. சக்கரம் கட்டிய வண்ணத்துப்பூச்சி.

* ரயில் ஒரு யானைக் கூட்டமாக இருக்கிறது. நெளியும் பாம்பாக, கனைக்கும் குதிரையாக, சிணுங்கும் குழந்தையாக. ஒவ்வொரு பார்வைக்கும் ஒவ்வொரு வடிவம் கொள்கிறது. சிவபெருமானுக்கு அடுத்தபடியாக நெற்றிக்கண்ணுடன் அலைவது ரயில் வண்டி மட்டுமே. நகர்ந்து செல்லும் ஆயிரம் ஜன்னல் வீடு.

* பல திசைகளிலிருந்து பிரிந்து வந்து மாநகரத்தில் தண்டவாளங்கள் ஒன்று சேருகின்றன.

## 13. மழைக்கு ஒதுங்கும் மாடர்.

அண்ணாதுரை முன்னுரை கேட்டு அணுகிய புதுமைக் கவிஞர். இயற்கையும் வாழ்வியலையும் பதிவாக்கி கவிதையில் வடித்திருந்தான். புத்தக வெளியீட்டு விழாவை தன் வாழ்வாதாரமான மாடுகளை விற்று சாத்தியமாக்கினான். சொற்களில் கவிதைகளில் இருக்கும் உணர்வு நிதர்சன வாழ்வில் அற்றுப்போகிறது.

## 14. சண்முகசுந்தரத்தின் சதுரக்காதல்

* சண்முகசுந்தரம் பார்க்கிற பெண்களை எல்லாம் காதலித்துக் கொண்டிருந்தான். ஒரே நேரத்தில் நான்கு பெண்களைக் காதலித்துக் கொண்டிருந்தான். பள்ளியில் படிப்பவள், கல்லூரி மாணவி, வங்கியில் வேலை செய்பவள், ஞாயிறு கோயிலுக்கு வருபவள் என ஒவ்வொருவரையும்

காதலித்தான்.

* வருடங்கள் கடந்து சென்ற வாரம் சென்னை மாநகரத் தெருவில் சண்முகசுந்தரத்தைப் பார்க்க நேர்ந்தது. தனது குழந்தைக்கு தேவையான உணவுப் பொருள் வாங்கக் கூட பணமின்றிக் கடன் கேட்டபடி நின்றான்.

## 15. பூ சாப்பிடுங்க தோழர்

* பதினைந்து வயதில் நான் கம்யூனிஸ்டாக மாறக் காரணம் வெனின் சுப்பையா என்ற பழவியாபாரி. ரஷ்ய இலக்கியங்களை அறிமுகப்படுத்தி என் திசையைத் தடம் மாற்றினார்.

* சென்ற வருடம் அவர் இறுதிச் சடங்கில் பங்கேற்றவர் கூறினார். அவர் உடல் எரிக்கப்படும் போது செந்தீ எங்கும் சுடர் விட்டு எரிந்தது என்றார். தீயிலிருந்து மரிகிற புகையெல்லாம் பூ சாப்பிடுங்க தோழர் என்கிற மாதிரியே இருந்தது.

x———x

* ஒவ்வொரு தலைப்பிலும் தனது வாழ்வியல் அனுபவங்களை இயல்பான நடையில் நம்மை நாமே தரிசிப்பது போன்று நினைவோட்ட உத்தியில் நா. முத்துக்குமார் பதிவு செய்துள்ளார். அருமையான உணர்வுகளைப் பெற புத்தகத்தில் (கிராமம், நகரம், மாநகரம்) கண்டு கொள்க.

## வினாக்கள்

1. 'கிராமம், நகரம், மாநகரம்' தொகுதியின் ஆசிரியர் ?
2. சக்கரம் கட்டிய வண்டிக்குப் பெயர் ஏது?

## சிறுவினா விடைகள்

3. அரிக்கப்பை, அஞ்சறைப்பெட்டி, தப்படிப்பை இவற்றைக் குறிப்பிட்டு எவற்றை விளக்குகின்றார் கவிஞர்.
4. குழந்தைகளின் உலகம் உறைந்து போனது ஏன் என்று கவிஞர் கூறுகிறார்?
5. விண்மீன்கள் கூறும் செய்திகள் யாவை
6. 'நெடுநாள் வாடை' உணர்த்தும் செய்திகள் யாவை?

## கட்டுரை வினா

7. 'கிராமம், நகரம், மாநகரம்' உரைநடைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்தெழுதுக